**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)**
**செயல்முறைகள்**
**ஆணையிடுபவர் : திரு.ப.செல்வம்.B.Sc.,DCP&IC.,MBA.,**

COLREV-COLR/58753/2023-A3 நாள்:13-05-2024

| | | |
|---|---|---|
| பொருள்: | பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி – திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி – IV (தேர்வு நாள்–24.07.2022) – இளநிலை வருவாய் ஆய்வாளராக தெரிவு செய்யப்பட்டு திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில் பணிபுரிந்து வரும் திரு.அ.கிரி மற்றும் திருமதி.கு.பவுணாயாள் ஆகியோருக்கு – பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. | |
| படிக்க : | 01. | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித எண் 1832/PSD-D1/2023, நாள். 22.08.2023. |
| | 02. | திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) செயல்முறை ஆணை COLREV-COLR/58753/2023-A3 நாள்:19.09.2023. |

******

**ஆணை:**

பார்வை-1இல் கண்டுள்ள கடிதப்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி-IV (தேர்வு நாள்:24.07.2022) அன்று நடைபெற்ற தேர்வு மூலம் இளநிலை வருவாய் ஆய்வாளராக தெரிவு செய்யப்பட்டு, திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை -2இல் கண்டுள்ளவாறு இம்மாவட்ட வருவாய் அலகில் பணிநியமனம் வழங்கப்பட்டு வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.எ.கிரி மற்றும் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.கு.பவுணயாள் ஆகிய இரண்டு நபர்களும் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 27.09.2023 பிப முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண்பருவம் துவக்கியும், இவர்களது தகுதிகாண்பருவம் மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண்பருவமாக

Scanned with OKEN Scanner

நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

2 ) இந்த பணிவரன்முறையானது நீதிப்பேராணை மனுக்கள் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்புரைகளுக்கு உட்பட்டது.

3 ) மேற்படி ஆணை குறித்து தனியர்களின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கோரப்படுகிறார்கள்.

Signed by
Selvam P
Date: 13-05-2024 10:38:36

P SELVAM
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது).
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்.

சம்பந்தப்பட்ட நபர்கள்.

நகல்:வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி.
நகல்:வட்டாட்சியர், திருப்பத்தூர்.
நகல்: அ3–இருக்கைக்கு.

Scanned with OKEN Scanner